1987 நவம்பர் 16]

சென்ற வெள்ளக்காலத்தில் கூட 3, 4 இடங்களில் சிறிய பாலங்களைக் கட்ட வேண்டுமென்று குறிப்புகள் அரசிடம் இருந்தன. செல்ஃபா ப்ராஜக்ட் என்ற திட்டத்தில்தான் இம் மாதிரியான திட்டங்களைச் சேர்த்திருக்கிறார்கள். அப்படிப் பட்ட திட்டங்களை விரைவாக நடத்துவதற்கு நடவடிக்கை எடுப்பார்களா என்பதை நான் அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. சு. முத்துசாமி : தலைவர் அவர்களே, சிறிய அளவில் மழை பெய்து அதனால் வரக்கூடிய வெள்ளத்தைத் தடுத்தோ அல்லது அதிலே பாதிப்பு இல்லாமல் போக்குவதற்கோ வழிவகை செய்ய முடியும். ஆனால் ஹெலிகாப்டரிலே இருந்து பொட்டலம் போடுகின்ற அளவுக்கு அவ்வளவு பெரிய வெள்ளம் ஏற்படுகிற நிலைமை இருக்கிறது என்றால் எவ்வளவு நல்ல சாலையாக இருந்தாலும் தண்ணீரில் மூழ்கக் கூடிய நிலைமைதான் ஏற்படும். இருந்தாலும், சிறிய பாலங்களைப் பொறுத்தவரையில் முன்னுரிமை கொடுப்பதற்கான நடவடிக்கைகளை எடுப்பது குறித்து பரிசீலனை செய்யலாம்.

போக்குவரத்துக் கழகப் பேருந்துகளை இன்சூர் செய்தல்

128—(*வினா எண். 11388) திரு. கே. சுப்பராயன் : மாண்புமிகு போக்குவரத்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) அரசு போக்குவரத்துக் கழகப் பேருந்துகள் இன்சூர் செய்யப்பட்டுள்ளதா?

(ஆ) இல்லை எனில், அதற்கான காரணம் என்ன?

மாண்புமிகு திரு. சு. முத்துசாமி : தலைவர் அவர்களே,

(அ) இல்லை.

(ஆ) மோட்டார் வாகனச் சட்டப் பிரிவு 94-ன் படி அனைத்து அரசு போக்குவரத்துக் கழகங்களின் மோட்டார் வாகனங்களுக்கு இன்சூரன்ஸ் பாலிசி எடுப்பதிலிருந்து விலக்களிக்கப்பட்டுள்ளது. கழக பேருந்துகளினால் விபத்துக்குள்ளானவர்களுக்குச் சட்டப்படி நட்ட ஈட்டுத் தொகை அளிக்க அரசு போக்குவரத்துக் கழகங்களே காப்பீட்டு நிதி ஏற்படுத்திக் கொள்ளலாமென வகை செய்யப்பட்டு உள்ளது. ஆகவே போக்குவரத்துக் கழகப் பேருந்துகளுக்கு இன்சூரன்ஸ் எடுக்கப் படுவதில்லை.

திரு. கே. சுப்பராயன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, அமைச்சர் அவர்கள் புன்னகையோடு இல்லை என்று சொல்லிவிட்டார்கள். நடைமுறையில் அந்தப் பேருந்துகளில் ஏற்படுகிற இழப்புகள் எப்படி ஈடு கட்டப்படுகின்றன. அவற்றால் ஏற்படுகிற நட்டங்களைக் கழகங்கள் எப்படி ஈடு கட்டுகின்றன என்பதை நான் அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. சு. முத்துசாமி : தலைவர் அவர்களே, ஒவ்வொரு பேருந்துக்கும் 4000 ரூபாய் வீதம் போக்குவரத்துக் கழகங்களில் ஒரு இன்சூரன்ஸ் போன்ற தொகையைச் சேர்த்து வைக்கிறார்கள். விபத்துக்குள்ளாகக் கூடியவர்களுக்கு நீதி மன்றத்தின் மூலமாகவோ அல்லது நேரடி பேச்சுவார்த்தையின் மூலமாகவோ எவ்வளவு கொடுக்க வேண்டுமென்று முடிவு எடுக்கப்படுகிறதோ அது அந்தத் தொகையிலே இருந்து கொடுக்கப்படுகிறது. ஒரு வேளை அந்தத் தொகை போதவில்லை என்று கருதினால் அந்தந்தப் போக்குவரத்துக் கழகங்கள் அதற்காக மேலும் தேவையான பணத்தை, தேவையான அளவுக்கு ஒதுக்குகின்றன.

திரு. கே. சுப்பராயன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, விபத்து ஏற்படுகிறபோது அந்த இழப்புகளுக்காகத் தொழிலாளர்களிடமிருந்து ஏதாவது தொகை வசூலிக்கப்படுகிறதா என்பதை நான் அறிய விரும்புகிறேன். அப்படி ஏதாவது வசூலிக்கப்படுமானால் அது கைவிடப்படுமா என்பதை நான் அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. சு. முத்துசாமி : பேரவைத் தலைவர் அவர்களே, விபத்துக்கள் ஏற்படுகிறபோது தொழிலாளர்களிடமிருந்து அதற்கான நஷ்ட ஈட்டை முழுமையாக வசூலித்துவிட முடியாது. ஆனால் விபத்துக்களைத் தடுக்கவேண்டுமென்ற உணர்வோடுதான் இந்த நடவடிக்கை எடுக்கப்படுகிறது. விபத்துக்குக் காரணமாக இருந்துவிட்டால் அந்தத் தொழிலாளருக்கு என்ன வகையில் உரிய தண்டனை கொடுக்க வேண்டுமோ, அந்தத் தண்டனை கொடுக்கிற வகையில் தொகை வசூலிக்கப்படுகிறதே தவிர பேருந்து அடிபட்டுவிட்டது, அதற்குக் காம்பென்சேஷன் என்பதைப்போல வசூலிக்கப்படுவதில்லை என்பதை நான் தெரிவித்துக்கொள்கிறேன்.

அருப்புக்கோட்டைக்கு பைபாஸ் ரோடு

129—(*வினா எண். 12328) திரு. வி. எஸ். பஞ்சவர்ணம் : மாண்புமிகு போக்குவரத்துத்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா—

அருப்புக்கோட்டைக்கு பைபாஸ் ரோடு போடும் திட்டம் எந் நிலையில் உள்ளது?

(முற்பகல் 10-50)

மாண்புமிகு திரு. சு. முத்துசாமி : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இப்பணிகளுக்கு முன்னுரிமை கொடுத்து எடுத்துச் செயல்படுத்த வேண்டும் என்று அடுத்து வரும் ஆண்டு பகுதி-2 திட்டத்தின்கீழ் செய்வதற்காக தயாரிக்கப்பட்டுள்ள திட்டப் பணிகளில் இது சேர்க்கப்பட்டுள்ளது.